இல்லை. ஏனென்று சொன்னால், 8 கி.மீ.-க்கு ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. எங்கேயெல்லாம் மலைப்பகுதி இருக்கிறதோ, remote village இருக்கிறதோ, அங்கேயெல்லாம் நடமாடும் மருத்துவக் குழு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் பள்ளிக்கூட மாணவர்கள் அங்கன்வாடி மையத்திலே screening-பரிசோதனை செய்வதற்கு-RBSK என சொல்லக்கூடிய பள்ளிச் சிறார்களுக்கான சிறப்புத் திட்டம் இருக்கிறது. ஆகவே, மருத்துவமனையை நாடி மக்கள் வரக்கூடிய நிலையை மாற்றி, மக்களை நாடி மருத்துவச் சேவை என்ற உன்னதமான நிலையை இந்தியாவிலேயே தமிழ்நாடு அரசுதான் அடைந்து இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 770 நடமாடும் மருத்துவக் குழுக்கள் மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

107—

வணிக வரி அலுவலகம்

***13233—திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டத்தில் வணிக வரி அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டத்தில் சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வணிகர்களுடைய எண்ணிக்கையும், வணிக வரி வருவாயும் மிகக் குறைவாகவே உள்ளதால், இம்மாவட்டத்திற்கென வணிக

2018 ஜூன் 1]

வரி வட்டமோ அல்லது வணிக வரி அலுவலகமோ இதுவரை அமைக்கப்படவில்லை. அரியலூர் வணிக வரி உதவி ஆணையரின் கட்டுப்பாட்டில் பெரம்பலூர் மாவட்ட வணிகர்கள் வருகின்றனர். இருப்பினும், வணிக வரித் துறை மறுசீரமைத்தலின்போது, பெரம்பலூர் மாவட்டத்தில் புதியதாக வணிக வரி அலுவலகம் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டரை கோடி தமிழர்கள் வாழ்வில் ஒளியேற்றி, தன்னையே மெழுகுவர்த்தியாக்கி வாழ்ந்து மறைந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்வீட்டுப் பையன் வைத்திருக்கும் கார் எனக்கு வேண்டுமென்று அழுது அடம்பிடிக்கும் சிறுகுழந்தையைப்போல, எதிர் வரிசையில் அமர்ந்திருக்கக்கூடிய முதலமைச்சரின் இருக்கைமீது ஆசை கொண்டு, முதலமைச்சர் இராஜினாமா செய்தால்தான் சபைக்கு வருவேன் என்று ஊடகங்களில்* கூறிவிட்டு, மீண்டும் சபைக்கு வர வழி தெரியாமல், அரசியல் கூட்டாளிகளைத் தூதுவிட்டு அனுப்பும் அளவிற்கு எதிர்க்கட்சியை (மேசையைத் தட்டும் ஒலி) அரசியலில் விரக்தியின் விளிம்பிற்கே கொண்டு சென்றிருக்கக்கூடிய (குறுக்கீடுகள்) எங்களது கட்சியின் தலைமை மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (குறுக்கீடுகள்) எங்களது பெரம்பலூர் மாவட்டம் பிரிக்கப்பட்டதால் (குறுக்கீடுகள்) மத்திய கலால் மற்றும் சுங்க வரி மற்றும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களை ஒன்றும் தனியாகக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. கட்சி என்றுதான் சொன்னார். (குறுக்கீடுகள்) அவர் பொதுவாகத்தான் சொல்கிறார். (குறுக்கீடுகள்) உங்களைச் சொல்லவில்லை. அவர் பொதுவாகச் சொன்னதை நீங்கள் ஏன் பெரிதுபடுத்திப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்?*

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது*

திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: *பெரம்பலூர் வருமான வரித் துறை அலுவலகங்கள் பிரிக்கப்பட்டு பெரம்பலூரில் செயல்பட்டு வருகின்றன. அதுபோல, வணிக வரி அலுவலகமும் பெரம்பலூருக்குத் தனியாக அமைத்துக் கொடுக்குமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) ஒரு கட்சியின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தால் நான் உங்களைப் பேசுவதற்கு அனுமதிப்பேன். அவர் பொதுவாகத்தான் சொன்னார், விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) விட்டுவிடுங்கள். இது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களைக் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தால் நான் அனுமதி கொடுப்பேன். அவர் எந்தப் பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. கட்சியையும் சொல்லவில்லை. அவர் பொதுவாகத்தான் சொன்னார். விட்டுவிடுங்கள். அது ஒன்றும் பிரச்சினை இல்லை. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள பதிவு பெற்ற வணிகர்களின் எண்ணிக்கை 1,009 ஆகும். (குறுக்கீடுகள்) தோராயமாக ஆண்டுக்கு ரூ.3,35,000/- வணிக வரி வருவாயாக. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களைச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், உங்களைக் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தால், உங்கள் கட்சியின் பெயரைச் சொல்லியிருந்தால், நான் நிச்சயம் நீக்கியிருப்பேன். (குறுக்கீடுகள்) தேவையில்லாமல், அவர் பொதுவாகச் சொல்லியதை, நீங்கள் ஏன் பெரிதுபடுத்துகிறீர்கள்? (குறுக்கீடுகள்) நீங்கள் பேசாமல் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள பதிவு பெற்ற வணிகர்களின் எண்ணிக்கை 1,009 ஆகும். (குறுக்கீடுகள்) தோராயமாக ஆண்டுக்கு ரூ.3,35,000/- வணிக வரி வருவாயாக ஈட்டப்படுகிறது. (குறுக்கீடு)*

2018 ஜூன் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திருமதி விஜயதரணி, உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *1-7-2017 முதல் நாடு முழுவதும் சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளதால், புதியதாக வணிகர்கள் பதிவு செய்யும்பட்சத்தில் வணிக வரி வருவாய் அதிகரிக்க வாய்ப்புள்ளது. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *வணிக வரித் துறையில் மறுசீரமைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் காரணமாக, ஒரு சில நகரங்களில் வணிக வரித் துறை அலுவலகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கவும் (குறுக்கீடுகள்) ஒரு சில நகரங்களில் வணிக வரித் துறை அலுவலகங்களின் எண்ணிக்கை குறையவும் வாய்ப்பு உள்ளது. எனவே, மறுசீரமைப்பு நடவடிக்கைகள் முடிந்த பிறகு (குறுக்கீடு) நிலைமையை ஆராய்ந்து, தேவைப்படின் பெரம்பலூர் மாவட்டத்தில் புதியதாக வணிக வரித் துறை அலுவலகம் அமைத்திட. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, தெளிவாக உங்களைக் குறிப்பிட்டு, உங்கள் கட்சிப் பெயரைச் சொல்லி அவர் பேசவில்லை. (குறுக்கீடு) பேசியிருந்தால், நான் நீக்கியிருப்பேன். இல்லையென்றால், ஒரு வாய்ப்புக் கேட்டாலும் கொடுத்திருப்பேன். இல்லையென்று நான் தீர்ப்பு வழங்கிவிட்டேன். (குறுக்கீடு) உட்காருங்கள், அதற்குமேல், நீங்கள் பேச முடியாது. (குறுக்கீடு) அனுமதியில்லை, அதற்குமேல், நீங்கள் ஒன்றும் பேச முடியாது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லுங்கள்.*

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுசீரமைப்பு நடவடிக்கை முடிந்தபிறகு நிலைமையை ஆராய்ந்து தேவைப்படின் பெரம்பலூர் மாவட்டத்தில் புதியதாக வணிக வரி அலுவலகம் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன், கேள்வி நேரத்தில் இதுமாதிரி எல்லாம் பிரச்சினைகளைப் பேச வேண்டாம். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) தேவையில்லாமல் இதையெல்லாம் கேள்வி நேரத்தில் பேசாதீர்கள். உட்காருங்கள்.

திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் தலைமையைப் புகழ்ந்தேன், வேறு ஒன்றும் சொல்லவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊடகங்களில்** என்று சொன்ன வார்த்தையை 'கூறிவிட்டு' என்று மாற்றிக்கொள்ளும்படி தயவுசெய்து கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: பெரம்பலூர் மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டு பெரம்பலூர், வேப்பந்தட்டை, வேப்பூர், வாலிகண்டபுரம், செட்டிகுளம் ஆகிய பகுதிகளில் சார்-பதிவாளர் அலுவலங்கள் இயங்கி வருகின்றன. எங்களது மாவட்டத்திற்கு மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தை வணிக வரித் துறை அமைச்சர் அமைத்துத் தருவாரா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் நன்றி சொல்லிவிட்டார். உட்காருங்கள். வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

108—

போக்குவரத்துப் பணிமனைக்குக் கட்டடம்

***25350—திரு. கே.பி.பி. சாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவொற்றியூர் தொகுதியில் உள்ள போக்குவரத்துப் பணிமனைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது